புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை – திரு.கூ.சண்முகம்,பி.எஸ்.ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

மூ.மு.எண்.8742/அ1/2024 நாள். 22.11.2024

பொருள் - பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV மூலம் இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் பெற்று - புதுக்கோட்டை வருவாய் மாவட்டம் – அறந்தாங்கி கல்வி மாவட்டம் – கீழையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் – இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் - திரு.ச.ஹரிசுதன் என்பாருக்கு – 29.09.2023 முற்பகல் முதல் – இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை –
1. அரசாணை நிலை எண்.151 பள்ளிக் கல்வி [எஸ்.இ1(1)] துறை நாள்: 09.09.2022
2. புதுக்கோட்டை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 06942/அ1/2023, நாள் 27.09.2023.
3. கீழையூர் அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் கடிதம் ந.க.எண்.78/2024 நாள்.01.10.2024.

-------

ஆணை-

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி IV மூலம் (TNPSC Group IV) தெரிவு செய்யப்பட்டு பார்வை(2)ல் காணும் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக நேரடி நியமனம் செய்யப்பட்டு புதுக்கோட்டை வருவாய் மாவட்டம், அறந்தாங்கி கல்வி மாவட்டம், கீழையூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் திரு.ச.ஹரிசுதன் என்பாருக்கு தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதியில் கீழ்கண்டவாறு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

| வ. எண் | தேர்வாணையப் பட்டியலில் வரிசை எண் | பணியாளர் பெயர் / பதவி / பணிபுரியும் அலுவலகம் | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்த நாள் |
|---|---|---|---|---|
| 01. | 474 | திரு.ச.ஹரிசுதன்<br>இளநிலை உதவியாளர்<br>அரசு உயர்நிலைப்பள்ளி,<br>கீழையூர். | 29.09.2023 முற்பகல் | 29.09.2023 முற்பகல் |

மேற்கண்டுள்ள பணியாளர் இளநிலை உதவியாளர் பணியில் தொடர் மூன்றாண்டுகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தை நிறைவு செய்ய வேண்டும். இத்தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அலுவலக நடைமுறை நூல் துறைத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

பணிவரன்முறை சார்பாக உரிய பதிவுகள் அன்னாரின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு:
அசல் பணிப்பதிவேடு

22/11/2024

முதன்மைக் கல்வி அலுவலர்
புதுக்கோட்டை

22/11/24

பெறுநர்-
சம்மந்தப்பட்ட பணியாளர் (உரிய வழியாக)

நகல் –
தலைமையாசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
கீழையூர்.